பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 23 உ செவ்வாய்க்கிழமை (09-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 19 கதிர்: 216

# மற்றொரு படகும் கவிழ்ந்தது

# மேலும் 67 ஈழ அகதிகள் பலி!!

## அடுத்தடுத்த இரவுகளில் சம்பவம்

சென்னை, அக்டோபர் 9

ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு தமிழகம் சென்று கொண்டிருந்த மற்றொரு படகு கடந்த ஞாயிறு இரவு நடுக்கடலில் கவிழ்ந்தது!

அதில் பயணம் செய்த 78 பேரில் 67 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்!!

அனலைதீவில் இருந்து இப்படகு புறப்பட்டது என்றும்- படகு நடுக்கடலில் கவிழ்ந்ததை அடுத்து அதில் பயணம் செய்தவர்களில் 11 பேர் நீந்தி கோட்டைப் பட்டினத்தை அடைந்தனர் என்றும் இந்திய வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

கடலில் மூழ்கியதாக கருதப்படும் 67 பேரை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்—

கரை சேர்ந்த 11 பேர் புயல் பாதுகாப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாசவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இரவும் தனுஷ்கோடி கடலில் இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிச்சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

இதேசமயம்—

சனி இரவு இராமேஸ்வரத்துக்கு அருகேயும் வேறு ஒரு அகதிகள் படகு கவிழ்ந்தது என்றும்—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மண்டைதீவில் மற்றொருவர் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 9

மண்டைதீவுப் பகுதியில் நேற்றும் ஒருவர் பொறிவெடியில் சிக்கி காலை இழந்தார்.

வேலணையைச் சேர்ந்த உ. இளங்கோ (வயது 15)என்பவரே மண்டைதீவு பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் பொறிவெடியில் சிக்கி தனது இடது காலை இழந்தார். [உ-5]

## 6 ராணுவத்தினர் காயமுற்றனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் செட்டிப்பாளையம் இராணுவமுகாமிலிருந்து களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமுக்கு வாகனம் ஒன்றில் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் காயமுற்றனர்.

வி தலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

## பிற மாகாண ஆசிரியருக்கு விசேட பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக் 9

வட மாகாணத்திற்கு அப்பாலுள்ள மாகாணங்களில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அனைவரையும் சலுகைக் கட்டணத்துடன் மீண்டும் அவர்களுடைய வேலையிடங்களுக்கு அனுப்புவதற்குரிய ஒழுங்குகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி, வட பிராந்திய மினிபஸ் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து செய்துள்ளது.

இவ்வாசிரியர்கள் அனைவரும் புதன்கிழமை மாலை 8 பஸ்கள் மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

சலுகைக் கட்டண அடிப்படையில் செல்வதற்காக

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறை பகுதியில் பல கட்டடங்கள் தகர்ப்பு!

யாழ்ப்பாணம், அக்.9

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள படையினர் அங்குள்ள தபால் அலுவலகம், மக்கள் வங்கிக் கட்டடம் ஆகியவற்றை குண்டு வைத்துத் தகர்த்திருப்பதாகத் தெரியவருகிறது.

தகர்க்கப்பட்ட தபால் நிலையம் தீவுப்பகுதியிலேயே மிகப்பெரிய தபால் அலுவலகம் என்பது குறிப்பிடத்தக்கது

தற்போது படையினர் பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை, சரம்பன் ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள பூட்டிய வீடுகள் உடைத்துக் கொள்ளையடிக்கப்படுவதாகவும், சேதமாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகளினால் அப்பகுதியிலிருந்து மக்களும் முழு அளவில் இடம் பெயர்ந்துள்ளனர். (உ-6)

## கல்குடா, வாழைச்சேனையில் கைதான 200 தமிழரும் எங்கே?

கொழும்பு, அக் 9

கடந்த இரு மாத காலத்தில் கல்குடா, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் சுமார் இருநூறு பேர் இராணுவத்தினராலும் ஊர்காவல் படையினராலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தகவல் ஏதும் இல்லை.

இது குறித்து கோறளைப் பற்று உதவி அரசாங்க அதிபரிடம் கைதானோரின் உறவினர்கள் முறைப்பாடு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனைப் பகுதியில் உள்ள ஊர்காவல் படையினரால் சுமார் இருபது தமிழர்கள் கடத்தப்பட்டுள்ளதாகவும் —

அவர்கள் குறித்தும் தகவல் எதனையும் பெறமுடிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கவனம்! காலம் பிந்திய மருந்து வகைகள் விற்பனை!!

யாழ்ப்பாணம், அக். 9

மருந்து பாவிப்பவர்களே! கவனம்!! யாழ்ப்பாணத்தில் இப்போது பல இடங்களில் காலாவதியான மருந்து வகைகள் விற்கப்படுகின்றன!!!,

பண்டத்தரிப்பு, அளவெட்டி, வண்ணார்பண்ணை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் காலாவதியான மருந்துவகைகளும், பிஸ்கட் போன்ற உணவு வகைகளும் விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் திணைக்கள உணவு மருந்துப் பரிசோதகர்கள் நடத்திய சோதனைகளின்போதே மருந்துச்சாலைகள் பலவும் செய்யும் மோசடி கண்டுபிடிக்கப்பட்டதாக பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை தெரிவித்துள்ளார்.

நாட்சென்ற - காலம் பிந்திய - மருந்து வகைகளைப் பாவிப்பதால் நோயாளருக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இங்கிருந்து சென்றோர் வவுனியாவில் தவம்!

யாழ்ப்பாணம், அக். 9

கடந்த இரு தினங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் பொருட்டு வவுனியாவுக்குப் பயணமானவர்களில் ஆயிரக்கணக்கானோர் வவுனியாவில் தங்கி நிற்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நடைபெறும் வவுனியா - கொழும்பு ரயில் சேவையில் தமது பயணத்தை தொடர்வதற்காகவே அவர்கள் அங்கு காத்திருக்கிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. எப்போது ரயிலைப் பிடிக்கலாம் என எண்ணித் தவம் கிடக்கிறார்கள்.

இவர்களில் பலரும் நகருக்கு வெளியேயுள்ள ஆலயங்கள், வீடுகளில் தங்கியிருப்பதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். நகருக்குள் சென்றால் அகதி முகாமில் தங்க வைக்கப்படலாம் என அஞ்சியே அவர்கள் வெளியே தங்கியிருப்பதாக அவர் மேலும் சொன்னார். [அ-5]

## இலங்கை அகதிகள் பிரச்சினை: வி.பி.சிங். அரசை சாடுகிறார் ராஜீவ்

சென்னை, அக். 9

இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் மீண்டும் இந்தியாவுக்குப் பெரும் எண்ணிக்கையில் வருவதற்கு தேசிய முன்னணி அரசின் தவறான வெளியுறவுக் கொள்கை தான் காரணமாக அமைந்துள்ளது.

முன்னாள் பிரதமரும் இந்திரா காங்கிரஸ் தலைவருமான ராஜீவ் காந்தி. கடந்த ஞாயிறு மாலை சென்னை மரினா கடற்கரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு குற்[illegible]

'தேசிய முன்னணி அரசில் தமிழ் நாட்டின் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆகையினால், இலங்கை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ராஜீவுக்கு கலைஞர் பதிலடி

இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைக்கு தி. மு. கவே பொறுப்பேற்க வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி வெளியிட்ட கருத்துக்கு முதலமைச்சர் கருணாநிதி நேற்று பதிலளித்தார்.

இது பற்றி செய்தியாளர் கேட்டதற்கு—

"யாழ்ப்பாணம் கோட்டை இப்போது தமிழீழ விடுதலைப் புலிகள் வசம் உள்ளது. இதற்கு தி.மு.க தான் பொறுப்பு என்[illegible] நமக்கு மகிழ்ச்சிதான்" என்று திரு கருணாநிதி சொன்னார். (உ-எ)

## மினிபஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 9

யாழ். குடாநாட்டில் உள்ளூர் மினிபஸ் சேவைகள் நேற்று ஓரளவு சீராக நடைபெற்றன.

நேற்று காரைநகர், பருத்தித்துறைக்கும் மினிபஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் முத்திரைச்சந்தியில் இருந்தே பஸ்சேவைகள் ஆரம்பமாகின.

அலுவலகங்கள் செயற்படத் தொடங்கியதை அடுத்து மக்கள் பெருமளவில் மினி பஸ்களில் பயணம் செய்தனர். (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## வாடகைக்கு

பாடசாலை மாணவியர்கட்கு உணவுடன் தங்குவதற்கு சகல வசதியுடன் அறை வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு இல 147 C/o உதயன், யாழ்ப்பாணம்.

[14348]

## "இராவணன் கோட்டை"

சிறுவர்களுக்கான கதை மாயாஜால மந்திர தந்திர விரதிரச் செயல்கள் நிறைந்தது 20/- ரூபா துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், சிவம் திருக்கணிதம் புத்தகசாலைகள் சாவகச்சேரி, லக்கி புத்தகசாலை. பண்டத்தரிப்பு. ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

(14388)

## தவறிவிட்டது

மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை உரும்பராய்க்கும், கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுப்பவர்கள் உதயன் கைலாச பிள்ளையார் பணிமனையில் ஒப்படைக்கவும்.

(14394)

## இடமாற்றம்

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் அமைந்திருந்த முறிவு, நோவு வைத்திய நிலையம் தற்போது சிறுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கையில், இராமநாதன் இல்லத்தில் அமைந்துள்ளது காலை 9 00மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வைத்தியம் நடைபெறுகின்றதென்பதையும் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன் பி. கிருலபராசா வசாவிளான்.

[14391]

## போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாள அட்டைகளையும் கவர் இட்டு உடனடியாகப் பெற்றுக்கொள்ள கிளீன்கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட் யாழ்ப்பாணம். நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வேலை நேரம் தினமும் காலை 6மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

[14362]

---

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனாமடம் – சுன்னாகம்

## விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி 90 / 91

மேற்படி பயிற்சி நெறிக்கு கல்வியாண்டு 90 / 91 இல் தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களையும் பயிற்சி நெறி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நடத்துவதற்கு

11-10-1990 வியாழக்கிழமை காலை 9 00மணிக்கு விவசாய நிறுவனத்தில்

சமுகமளிக்கும்படி அதிபர் அன்புடன் வேண்டுகிறார்.

— அதிபர்.

[14397]

---

ஆண்டு 5 தொடங்கி ஆண்டு 11 வரையிலான மாணவர்களின்

## கவனத்திற்கு

ஆண்டு 5 தொடங்கி 11 வரையான வகுப்புகளில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் 09-10-90 பிற்பகல் 3 மணிக்கு தவறாது சமுகமளிக்கவும்.

— அதிபர்.

# ★ யூனிவேர்சல் ★

கந்தர்மடம், — யாழ்ப்பாணம்.

[சி-5229]

---

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் செல்வநாயகம்

குரும்பசிட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் காலமானார்.

இவர் தப்பிப்பிள்ளை தங்கமுத்துவின் அருமை மகளும்; முன்னாள் இ. போ. ச. நடத்துனர் செல்வநாயகத்தின் அருமை மனைவியும், வசந்தகுமார் (கனடா), நந்தகுமார் (கனடா), விஜயகுமார், சாந்தகுமார் (V C. புத்தூர்), சாந்திமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், மங்கிளேஸ்வரி (சிவயோகம்), சிவலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தப்பித்துரை, மங்கிளேஸ்வரி (கனடா) கிருஷ்ணசாமி (யாழ்ப்பாணம் கச்சேரி), சிவப்பிரகாசம் (வவுனியா வர்த்தகர்), செல்லம்மா, சொறுணம்மா, ஆகியோரின் மைத்துனியுமாவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7 – 10 – 90 இல் பகல் 12 மணியளவில் உரும்பராயில் நடந்தேறியது.

தகவல்:
வ. செல்வநாயகம்,
(கணவன்)

[14392]

---

# போதனா வைத்தியசாலைப் பிரிவில் பெரும் இட நெருக்கடி

## நோயாளருக்கு மட்டுமன்றி டாக்டர்களுக்கும் சிரமம்

யாழ்ப்பாணம், அக் 9

மானிப்பாயில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலைப் பிரிவில் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பெரும் இடநெருக்கடி நிலவுகிறது.

இதன்காரணமாக நோயாளிகள் மட்டும் அன்றி நோயாளிகளைப் பார்வையிடும் டாக்டர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறவேண்டிய நோயாளிகள், இடவசதி இல்லாத காரணத்தால் ஒருவருக்கு மாத்திரம் உரிய இடத்தில் மூன்று அல்லது நான்குபேர் இருந்து சிகிச்சை பெறவேண்டியுள்ளது.

பலதரப்பட்ட நோயாளிகளும் அருகருகாக தங்கி சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இருக்கும் படுக்கை வசதிகளுக்கு மேலாக மூன்று அல்லது நான்கு மடங்கு நோயாளர் தற்போது இருப்பதால் நடைபாதைகள், வெளிவிடர்கள் போன்ற பகுதிகளிலு நோயாளிகள் தங்கியுள்ளனர்.

ஆரம்பத்தில் பாவித்த கட்டடங்களைவிட தற்போது மேலதிக கட்டடங்கள் பாவிக்கப்படுகின்றபோதிலும் இடநெருக்கடி குறைந்தபாடில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-15)

## அறுவடையில் சிறுவர்

யாழ்ப்பாணம், அக். 9

தம்பலகமம் பகுதியில் நெல் அறுவடையில் சிறுவர்களே ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கைகளால் இளம் தொழிலாளர்கள் பலர் இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். வேறிடங்களில் இருந்தும் அங்கு தொழிலாளிகள் இம்முறை வரவில்லை.

(இ-6)

## சிமெந்து கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு

யாழ்ப்பாணம், அக். 9

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரிகளுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை காலை 9 00 மணி அளவில் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கக் கட்டடத்தில் நடைபெறும்.

தொழிற்சாலை முகாமையாளர் திரு எஸ். ஞானபண்டிதன் இதனை அறிவித்துள்ளார்.

(இ - 6)

## அச்சுவேலியில் ஹெலி தாக்கு

அச்சுவேலி, அக் 9

கடந்த வியாழனன்று ஹெலித்தாக்குதலால் அச்சுவேலியைச் சேர்ந்த முருகன்-பராபரன் (வயது 22) என்பவர் படுகாயம் அடைந்தார். இவர் தோட்டத்தில் விவசாய முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் தாக்குதலுக்கு உள்ளானார்.

(இ-11)

## மாவடியில் திருட்டு

யாழ்ப்பாணம், அக். 9

வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் உள்ள தனியார் கடை ஒன்றில் கடந்தவாரம் உணவுப் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கடையின் ஓடுகளைப் பிரித்து உள்ளே சென்ற திருடர் கோஷ்டி அங்கிருந்த அரிசி, சீனிமற்றும் உணவுப்பொருள்களை இரவோடிரவாகத் திருடிச் சென்றது.

திருடப்பட்ட உணவுப் பொருள்களின் பெறுமதி பத்தாயிரம் ரூபாவுக்குமேலாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

## இராஜினாமா!

பெங்களூர், அக். 9

கர்நாடக முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் சுகவீனம் காரணமாக தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

புதிய முதலமைச்சரைத் தெரிவுசெய்வதற்காக கர் [illegible] இந்திரா காங்கிரஸ் எம்.எல். [illegible] புதன்கிழமை நடைபெறும்.

(உ-எ)

---

## எவர்விஷன்

வாடிக்கையாளர்களுக்கு!

எம்மிடம் திருத்துவதற்கு தந்த T. V. டெக் போன்றவற்றை தயவு செய்து திரும்பப் பெற்றுக் கொள்ளவும் காலை 9 மணிமுதல் 11 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

எவர்விஷன்,
மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(14398)

---

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
[வரையறுள்ளது]

## பதவி வெற்றிடம்

பதவி:

பொது முகாமையாளர் 101/4

மேற்படி பதவிக்கு ஆண்பாலரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி: 24-10 90**

1. சம்பள அளவுத் திட்டம்: 1755 — 2805 / 75 x 6 — 100 x 6
2. வயதெல்லை: 30 — 45 வரை
3. பிணைப்பணம்: உரொக்கம் ரூ. 10 000/- ஆதனப் பிணை ரூ 25,000/-
4. **கல்வி மற்றும் தகைமைகள்:**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 5ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 03 வருடங்களுக்குகுறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 6ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 08 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், இவ் எட்டு வருட கால அனுபவத்தில் 02 வருடங்களுக்கு குறையாமல் சிரேட்ட முகாமை மட்ட பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் (க. பொ. த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், இப்பத்து வருட கால அனுபவத்தில் குறைந்தளவில் சிரேட்ட முகாமை மட்டப் பதவியில் 02 வருட கால அனுபவம்.

**குறிப்பு:**

1. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து அனுப்பப்படல்வேண்டும்.
2. கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் பிரதிகளும் வசிப்பிடத்தகமை பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடில் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் நற்சான்றிதழ் பிரதிகள் இரண்டும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல்வேண்டும்.
3. கால்நடை வளர்ப்பு, கால்நடை உணவு தயாரித்தல் போன்றனவற்றில் அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பப்படிவங்கள் யாவும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும் விண்ணப்பப்படிவம் கடித மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது முகாமையாளருக்கான பதவி விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
5. மேலதிக விவரங்களுக்கு சங்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
08-10-90

(சி/5241)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழ் மாணவர் எடுபடலாகாது

தமிழ் பேசும் மக்களின் பல்கலைக்கழகங்களை அழிய விடுவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சி கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

★ யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் விரும்பினால் தும்பளை வளாகத்துக்கு மாற்றம் பெறலாம் என அரசாங்கம் வசதி செய்துள்ளமை.

★ யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலர், தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயில்வதற்குத் தமக்கு வசதி செய்து தருமாறு கேட்டது.

மேற்கண்ட இரண்டு விடயங்கள் குறித்தும் மறுமலர்ச்சிக் கழகம் கண்டனமும், விசனமும் தெரிவித்துள்ளது. அந்தக் கண்டனமும், விசனமும் நியாயமானவையே.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகமும் அரசாங்கம் உத்தியோக பூர்வமாக யுத்தப் பிரகடனம் செய்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ளவை. இந்த இரண்டு பல்கலைக்கழகங்களும் அமைந்துள்ள பகுதிகளில் அரசாங்கப் படைகள் ஈவிரக்கமின்றி வான் தாக்குதல்களை நடத்தி நாசம் விளைவிக்கின்றன.

பெரும் யுத்தம் நடக்கும் போது, பல்கலைக்கழகங்களின் அருகே குண்டுகளும், ஷெல்லுகளும் வீசப்படும் போது, அவற்றைத் திறந்து கல்வி புகட்ட முடியுமா? பயமும், மனப் பதற்றமும் இருக்கும் போது எந்த மாணவனால் பாடத்தைக் கருத்தூன்றிப் படிக்க இயலும்?

எனவே யுத்தப் பிரதேசத்தில் பல்கலைக்கழகம் ஒன்று இயங்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏன், தென்னிலங்கையில் வெறும் வன்செயல்களைக் காரணம் காட்டி அங்குள்ள பல்கலைக்கழகங்கள் மாதக் கணக்காக மூடப்பட்டிருந்ததை மறைக்க முடியாது.

அப்போது தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த வடக்கு-கிழக்கு மாணவர்கள் திருநெல்வேலியில் அல்லது வந்தாறுமூலையில் கல்வி பயில வசதி செய்யப்பட்டதா? அது குறித்து எண்ணித்தானும் பார்க்கப்பட்டதா?

இப்போது மட்டும் யாழ் பல்கலைக்கழக மாணவருக்குத் தெற்கில் பயில வசதி செய்யப்படுவதன் உள் நோக்கம் என்ன? தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள பல்கலைக்கழகத்தைப் பலவீனப் படுத்தவே அன்றி தமிழ் மாணவர் கல்வியில் அக்கறை கொண்டல்ல.

இந்தத் திட்டமிட்ட சதிக்கு தமிழ் மாணவர்கள் எடுபட்டு விடக் கூடாது.

அரசாங்கத்தின் பசப்பு வார்த்தைகளை நம்பி யாழ். பல்கலைக்கழக மாணவர் எவரும் தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்துக்குச் செல்லக் கூடாது. அப்படிச் செல்பவர்கள் சக மாணவர்களுக்கு மட்டுமன்றித் தங்கள் மண்ணிற்கும் துரோகம் செய்பவர்களாகக் கருதப்பட வேண்டியவர்கள்.

அவர்கள் அசல் சுயநலவாதிகள். தங்கள் சுயநலத்துக்காக, தமிழர்களின் சுயமரியாதையை விற்கும் பச்சோந்திகளாகக் கொள்ளப்பட வேண்டியவர்கள்.

---

### வாசகர் திருமுகம்

# பொது ஸ்தாபனங்கள் யாவும் பேசாமடந்தைகள் ஆனதேன்?

அன்பார்ந்த ஆசிரியருக்கு,

தங்கள் பத்திரிகை அலுவலகத்தின் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதை அறிந்து துணுக்குற்றோம். ஓர் ஊழியரை இழக்கவும் மற்றும் இருவர் ஊனமுறவும் நேர்ந்ததையிட்டு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் பத்திரிகா தர்மத்தை நிதானமாக, நியாயமாகக் கடைப்பிடித்து வருவதனால், உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறைவு என நினைத்து ஆறுதல் அடையுங்கள். உங்கள் மக்கள் பணியைத் தொடருங்கள்.

எங்களைப் போன்ற அபிமான வாசகர்கள் இருக்கும் வரை உதயன் குன்றாமல் சேவை செய்ய முடியும் என்ற தைரியத்துடன் செயலாற்றுங்கள்.

வேறு மக்கள் ஸ்தாபனங்களுக்குப் பாதிப்புகள், இழப்புகள் நடந்து விட்டால் உங்கள் பத்திரிகையில் கண்டனச் செய்திகள் வெளியிடுவீர்களே பத்திரிகையில் பெயர் வந்து பிரசாரமும், புகழும் வாங்குவதற்காக பல்துறைத் தலைவர்களும், பெரியவர்கள் என்று இருப்பவர்களும், மதிப்பான அந்தஸ்தில் உள்ளவர்களாகத் தம்மைக் கருதுவோரும் கண்டன அறிக்கை வெளியிடுவார்களே. நீங்களும் பாதிப்பின், இழப்பின் கனம் அறிந்து பிரசுரிப்பதை நாம் அவதானித்திருக்கிறோம்.

உதயனுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து கண்டனச் செய்தி எதையுமே வெளியிடக் காணோமே. உங்களுக்கு ஏற்பட்ட தாக்கம் குறித்து எவரும் கவலையோ, கண்டனமோ தெரிவிக்கவில்லையா? அல்லது கிடைத்த கண்டனங்களை, கவலைகளை உங்களோடு சம்பந்தப்பட்டவை என்பதால் பெரிதுபடுத்திக் காட்ட விரும்பாமல் விட்டு விட்டீர்களா?

பத்திரிகை மக்களின் பிரதிநிதி அதற்கு உண்டாகும் பாதிப்பு மக்களுக்கு ஏற்பட்டதற்குச் சமன். ஆகையால், மக்கள் சேவை புரிவதாக, அவர்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாகக் கூறிக்கொள்ளும் சகல பொது, மத ஸ்தாபனத்தினரும் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்துக் கண்டித்திருக்க வேண்டும். தங்களுக்காகக் குரல் கொடுக்கும் பத்திரிகை தாக்கப்படுவதைக் கண்டிக்காமல், கவலை தெரிவிக்காமல் விடுவது பெரும் விசனத்துக்கு உரியது.

புலிகளைத் தாக்குவதாகக் கூறிக் கொண்டு தமிழ் மக்களை அரசாங்கப் படைகள் கொன்றொழித்து நாசம் செய்வதை நாம் எமது கண்ணால் பார்க்கிறோம். எனினும் பத்திரிகை நிறுவனம் ஒன்று படையினரின் இலக்குக்கு உள்ளாகி விட்டது என்றால், அடுத்து பொதுமக்கள் வெளிப்படையாகத் தாக்கப்படப் போகிறார்கள் என்பதற்குச் சமிக்ஞை காட்டப்பட்டிருக்கிறது என்பதே உள்ளார்ந்த அர்த்தம்.

எமது மத்தியில் உள்ள பிரஜைகள் குழுக்கள் போன்ற பொதுநல ஸ்தாபனத்தினரும், பெரியவர்களும், புத்தி ஜீவிகளும் இதனை உணரத் தவறி விட்டார்களா? ஏன்?

பத்திரிகை மக்களைப் பல வகைப்பட்ட ஆபத்துகளில் இருந்தும், பாதிப்புகளில் இருந்தும் பாதுகாக்கும் கேடயம் என்பதை அவர்கள் அறியார்களோ? அல்லது பாதிக்கப்பட்டவனுக்கு ஆறுதல் கூறும் பண்பு தானும் இல்லாதவர்களோ! அவர்கள் பேசாமடந்தைகளாகி விட்டது எதற்காக?

இது குறித்து மக்களாகிய நாம் வெட்கப்படுகிறோம்.

இன்னல்களின் மத்தியிலும் தமிழர்களின் நலன் நாடிச் சேவையாற்றும் உங்கள் பணி தொடரட்டும்.

கா. சண்முகதாசன்

நல்லூர் வடக்கு.

**ஆசிரியர் குறிப்பு:**

உதயன் மீது குண்டுவீச்சு நடத்தப்பட்டதை அறிந்து திரு சண்முகதாசனைப் போல பல வாசகர்கள் அனுதாபமும், ஆறுதலும் தெரிவித்துக் கடிதங்கள் அனுப்பினார்கள். பலர் நேரில் வந்து எமது கவலையில் பங்கு கொண்டார்கள்.

குறிப்பிட்டுக் கூறக்கூடிய விதத்தில் நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் மட்டுமே அனுதாபம் தெரிவித்தும் கண்டனம் தெரிவித்தும் இரு வேறு கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அவர்கள் எல்லோருக்கும் உதயன் நிர்வாகத்தினர் சார்பில் நன்றிகள் உரித்தாகுக.

வேறு எந்த மதத் தலைவர்களோ, பொதுஸ்தாபனங்களோ உதயன் தாக்கப்பட்டது குறித்துக் கண்டனம் தெரிவிக்க முன்வரவில்லை. ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்குப் பயந்துவிட்டார்கள் போலும்! ★

---

## நெடுந்தீவுக்கான தபால்கள்

நெடுந்தீவு, அக். 9

யாழ்நகரில் தேங்கிக் கிடந்த நெடுந்தீவுக்கான தபால்கள் புங்குடுதீவில் இருந்து நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

மூன்று மாதங்களுக்கு மேலாகத் தேங்கிக் கிடந்த இத் தபால்களை விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (இ-111)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக். 9

தென்மராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும் போர்க்கால கல்வி அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ - 6)

## முல்லைத்தீவுக்கு மருந்துகள்

யாழ்ப்பாணம், அக். 9

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, யாழ் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழு ஒன்று, மருந்துவகைகளுடன் ஞாயிறு காலை முல்லை தீவுக்குப் பயணமானது. (உ-5-6)

## மீன் சந்தை

குருநகர், அக். 09

பாசையூர் கடற்கரை மீன் சந்தை இரண்டு மாதங்களுக்குப் பின்பு தற்போது மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. (இ- 51)

## பூசை இல்லை

மாங்குளம் அக். 9

மாங்குளம் ஆலயத்தில் மூன்று மாதங்களுக்கு மேலாக பூசை வழிபாடு இல்லை.

ஆலயம் பொம்மர் தாக்குதலில் பலத்த சேதமடைந்துள்ளது. ஆலய பூசகர் இராணுவ நடவடிக்கையடுத்து அகதியாக இடம் பெயர்ந்துள்ளார். (இ - 94)

## பழைய இடத்தில்

அச்சுவேலி அக். 9

அச்சுவேலிப் பொதுச் சந்தை மீண்டும் பழைய இடத்தில் செயற்படுகிறது. (இ - 11)

---

## அபராதம்

குருநகர், அக். 9

வட இலங்கை சிகை அலங்காரிப்பாளர் சங்கக் கட்டுப்பாட்டை மீறிய ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சங்கத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் குடிமைத் தொழில் தடையை மீறியதுக்காக நல்லூரைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (இ 51)

---

### மின்சாரம் வந்ததை அடுத்து

# முல்லைத்தீவில் அரிசி ஆலைகள் இயங்க ஆரம்பித்தன

முல்லைத்தீவு, அக். 9

முல்லைத்தீவுக்கு மீண்டும் மின்சாரம் கிடைத்ததை அடுத்து இதுவரை இயங்காமல் இருந்த அரிசி ஆலைகள் இயங்க ஆரம்பித்துள்ளன.

இதனால் அரிசி மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் குறைந்து வருகின்றன.

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த சில காலங்களாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

மின்சார இணைப்பை மீண்டும் ஏற்படுத்துவதற்கு ராணுவத்தினர் இதுவரை தடையாக இருந்து வந்தனர். (இ 94)

---

# சம்பள முற்பணமாக 500ரூபாவும்வழங்கமுடியாது

## மின். சபை அதிகாரிகள் திண்டாட்டம்

கப்பல் மூலம் கொழும்பிலிருந்து வந்த பணத்தை எப்படி தமது ஊழியருக்கு முற்பணமாக பங்கிடுவது என்பது தெரியாமல் மின்சார சபையின் வடபகுதி அதிகாரிகள் திண்டாடுகின்றார்கள்!

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மின்சாரசபை ஊழியர்களுக்கு கடந்த மூன்றுமாத காலமாக சம்பளமோ அன்றி முற்பணமோ வழங்கப்படவில்லை.

இதுகுறித்துக் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு பல தடவைகள் அறிவித்ததன் விளைவாக, இம் மாதம் முதலாம் திகதி வந்த கப்பலில் மூன்று லட்சம் ரூபா மட்டும் அனுப்பப்பட்டது.

5 மாவட்டங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் வழங்குவதற்கு 15 லட்சம் ரூபாவுக்கும் கூடுதலாகத் தேவை.

3 லட்சத்தையும் பங்கிட்டு முற்பணமாகக் கொடுப்பதானால் தலைக்கு 500 ரூபாயாவது தேறுமா என்று இங்குள்ள அதிகாரிகள் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கிறார்கள். (அ-9)

## சுடுதண்ணீர் போத்தலில்..,

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களில் பங்கீட்டு அட்டைக்கு உணவுப் பொருள்களை வாங்கச் செல்வோர் சிலர் சுடுதண்ணீர் போத்தலில் கோப்பி - தேநீர் கொண்டு செல்கிறார்கள். (இ - 31)

---

## நெடுந்தீவு உ. அ. அதிபர்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக யாழ். செயலகப் புனர் வாழ்வுப் பகுதியில் பணிபுரிந்த திரு. சி. வேல்முருகோன்பிள்ளை இம்மாதம் முதல் நியமனம் பெற்றார்.

இங்கு பணிபுரிந்த திரு. எம். தம்பிப்பிள்ளை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ - 100)

---

### அகதிகள் ஸ்தானிகராலய

# வானொலிக் கருவி மீண்டும் இயங்க ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், அக் 9

ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தின் 'வானொலிக் கருவி, திருத்தப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளது.

குடாநாட்டுடனான தொலைத்தொடர்புகள் யாவும் முன்னர் துண்டிக்கப்பட்டிருந்த வேளையில் கொழும்புடன் தொடர்பு கொள்ள இந்தக்கருவி பெரும் உதவியாக இருந்ததும், பின்னர் கருவி பழுதடைந்து கொழும்புக்குக்கொண்டு செல்லப்பட்டதும் தெரிந்தவையே.

அதேசமயம் இந்த வானொலிக் கருவியை அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளும் அரச அலுவலகங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும மாத்திரமே பாவிக்கமுடியும் என்றும்- பொதுமக்களின் தனிப்பட்ட விடயங்களுக்காக பாவிக்கமுடியாது என்றும் ஸ்தானிகராலய பொறுப்பதிகாரி திரு. அஷோக்குமார் தெரிவித்தார். (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்எண்ணெய் தாராளமாக கொண்டுவருவதற்கு அனுமதி

## எனினும் பீப்பாய்ப் பிரச்சினை

யாழ்ப்பாணம், அக். 9

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வார இறுதியளவில் மண்எண்ணெய் கொண்டு வரும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது

கடந்த ஜூன்மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் வடபகுதிக்கு எரிபொருள்கள் கொண்டு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்திருந்தது தெரிந்ததே.

ஆனால் எரிபொருள்களில் முதலில் மண்எண்ணெய் கொண்டுவர இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இவ்வார இறுதியில் போதியளவு எண்ணெய் தரை மார்க்கமாக இங்கு கொண்டுவரப்பட உள்ளதாகப் பெற்றோலியம் கூட்டுத்தாபன வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் பீப்பாய்களில் மண்எண்ணெய் கொண்டுவர ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

எனினும் இங்கிருந்துபீப்பாய்களைக் கொண்டுசெல்வதற்கு இயலாது என்றும் கொழும்பில் பீப்பாய்களை வாங்கியே மண்எண்ணெய் நிரப்பிக் கொண்டுவர வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளதாம்.

எப்படியாயினும், இங்கிருந்துபீப்பாய்களை கொண்டு சென்று மண்எண்ணெய் எடுத்துவர அனுமதிக்குமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம்கலாநிதி. தேவநேசன் நேசையாவுக்கு பெற்றோலியம்கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் திரு. எஸ். சிவஞானம் நேற்று அவசர வேண்டுகோள் விடுத்தார். (அ-6)

## ஆசிரிய கலாசாலைகள் நேற்றுமுதல்இயங்குகின்றன

பலாலி ஆசிரிய கலாசாலை, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆகியன நேற்று திங்கட்கிழமை முதல் இயங்கத் தொடங்கி உள்ளன.

இரண்டு பயிற்சிக் கலாசாலைகளிலும் நேற்று விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளதால் ஆசிரிய மாணவர்களைச் சமுகமளிக்குமாறு கலாசாலைகளின் அதிபர்கள் கேட்டுள்ளார்கள்.

இரண்டாம் வருட மாணவர்கள் 1991 ஆம் ஆண்டு இடமாற்றம் பெறுவதற்கு புதன்கிழமைக்கு முன்னர் விண்ணப்பம் அனுப்ப வேண்டும் எனவும்-

ஆகையால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் இன்று தவறாது சமுகமளிக்கவேண்டும்என்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் தெரிவித்தார். [அ-6]

## பயண அனுமதி நிறுத்தம்

''யாழ். மாவட்டத்தில் வசிக்கும் வெளிமாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களுக்கான பிரயாண அனுமதி மட்டும் யாழ் முத்திரைச்சந்தியில் வழங்கப்படும்.

வவுனியா மாவட்டத்திற்கு வெளியே செல்லும் ஏனையவர்களுக்கான அனுமதி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது

மீண்டும் நாளை முதல் தொடர்ச்சியாக இவர்களுக்கான அனுமதி வழங்கப்படும். இதற்கு சகல மக்களையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்''

-இவ்வாறு வடபிராந்திய மினிபஸ் சங்கம் சார்பில் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. (உ)

## அறிவித்தல்

சிவலிங்கம் வைத்தியசாலை மீண்டும் கணக்கர் சந்தியில் இயங்குகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

— நிர்வாகத்தினர்.

(14399)

## அறிவித்தல்

### திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலய கேதாரகௌரி காப்பு விநியோகம்

திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவில் கேதாரகௌரி விரத காப்பு இம்முறை மக்களின் வசதி கருதி திருகோணமலையில் இருந்து கொண்டு வரப்பட்டு கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவிலில் 18-10 90 வியாழக்கிழமை காலை 8 மணிப் பூசையைத் தொடர்ந்து காப்பு வழங்கப்படும்; அடியார்கள் முன்கூட்டியே வந்து பதிவு செய்து கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
P. கிருஷ்ணமூர்த்தி சர்மா
இலங்கைநாயகி அம்மன் கோவில்,
கல்வியங்காடு,
நல்லூர்.

தகவல்;
பத்திரகாளி அம்மன் கோவில்
ஆதீனகர்த்தா
சோ. ரவிச்சந்திரக் குருக்கள் (13885)

## 4 தமிழர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டம் தேர்த்தாந்தீவில் 4 தமிழ் மக்கள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

— விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

## இலங்கை அகதி.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நெருக்கடிக்கான முழுப் பொறுப்பையும் தி.மு.க.வே. ஏற்கவேண்டும்;

முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனும் முன்னாள் காங்கிரஸ் மத்திய அரசும் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டாக எடுத்த நடவடிக்கைகள் இன்று சீர் குலைக்கப்பட்டுள்ளன.

—இப்படி திரு; ராஜீவ் காந்தி மேலும் சொன்னார்.

பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பேசுகையில் இலங்கை நெருக்கடியில் இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு, போராளிகளும் இலங்கை அரசும் பேச்சுக்களை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று கேட்டுக் கொண்டார். (இ-எ)

## கல்குடா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்றும் தெரிவிக்கப் பட்டது.

வாழைச்சேனை தமிழ்ச் சந்தையிலும், முஸ்லிம் சந்தையிலும் வைத்து 180 தமிழர்கள் வரை பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டவர் என்றும் கூறப் பட்டது. [உ 5]

## மற்றொரு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் இந்தியக் கடற் படையினர் படகில் இருந்த அனைவரையும் காப்பாற்றினர் என்றும் செய்திகள் வெளியானது தெரிந்ததே. [உ-எ]

## பிற மாகாண---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பித்த சகல ஆசிரியர்களையும், இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. தமிழ் வித்தியாலயத்தில் சங்க நிர்வாகிகளைச் சந்தித்து தமது பயணத்திற்கான சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி தமது போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக விவரங்களை பெற்றுக்கொள்ளுமாறும் கோரியுள்ளார். [உ]

## கவனம்...

குப் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் —

அவற்றை விற்போரின் பொருள்களைப் பறிமுதல் செய்யும்படி தமது உத்தியோகத்தர்களைப் பணித்திருப்பதாகவும் —

காலம்பிந்திய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகளை விற்போர் குறித்துப் பொமக்கள் தகவல் தரவேண்டும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## செய்திச் சாரம்

## 40 தமிழர்கள் கைது !

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கிராமத்தை நேற்று முன்தினம் சுற்றி வளைத்த படையினர் அங்கிருந்து 40 தமிழர்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

## திரிபதி மரணம்

இந்தியாவின் பழம் பெரும் சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவரான திரு. கமலபதி திரிபதி நேற்று அதிகாலை வாரணாசியில் காலமானார். அவருக்கு வயது 86. இந்திரா காங்கிரஸின் செயற் தலைவராக இவர் இறுதியில் பணியாற்றி வந்தார். (இ-எ)

## ஆஸ்பத்திரி அலுவலர் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 9

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு வேலணை அரசாங்க ஆஸ்பத்திரியில் தற்காலிகமாக இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறும். [இ]

## ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக். 9

கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் கொக்குவில் பிரதேச நூலகக் கட்டடத்தில் முழுமையாக இயங்க ஆரம்பித்துள்ளது.

எனவே, சகல தர ஊழியர்களும் நாளை புதன்கிழமை முதல் கடமைக்கு சமுகமளிக்க வேண்டும் என கூட்டுறவு உதவி ஆணையாளர் செலிங்கநாதன் கேட்டுள்ளார். [உ-6]

★ ★ ★

யாழ்ப்பாணம், அக் 9

வவுனியா தபாலகம் இயங்கவுள்ளதால் அங்கு பணிபுரியும் சகல உத்தியோகத்தர்களையும் அவரவர் பொறுப்புகளை கையேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வவுனியா தபாலகம் உடனடியாக இயங்க இருப்பதாக மாவட்ட தபால் அத்தியட்கர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் தெரிவித்தார். (அ)

## ஹிரோஷிமாவில் ஆசிய விளையாட்டு

பீகிங், அக். 8

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நேற்று (ஞாயிறு) முடிவடைந்தன.

அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டி 1994-ஆம் ஆண்டு நடைபெறும். உலகப் போரின் போது அணுகுண்டு வீச்சுக்கு இலக்கான ஹிரோஷிமாவில் (ஜப்பானில்) அது நடைபெறும். (அ)

## மறுப்பு

பெங்களூர், அக். 9

கர்நாடக முதல்வர் ராஜினாமாச் செய்ததாக முன்னர் வெளிவந்த செய்தி தவறு என அறிவிக்கப்படுகிறது.

திரு. விரேந்திர பட்டீல் பதவி விலக மறுத்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது.

(முன்னர்வந்தசெய்தி 2ஆம் பக்கத்தில்.)

(அ)

## நோபல் பரிசு

லண்டன், அக். 9

1990 ஆம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த டொனூர் காஸ், ஜோசப் ஹர்வி ஆகிய இரு மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இருவரும் மனித உடலில் மாற்று உறுப்புக்களைப் பொருத்துவது தொடர்பான சிக்கல்கள் குறித்து ஆய்வு நடத்தியதற்காக இந்தப் பரிசு இருவருக்கும் கூட்டாக வழங்கப்பட்டது. [உ-5]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக் 9

திருகோணமலை மாவட்டத்துக்கு செல்ல முடியாத நிலையில் உள்ள அப்பகுதி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை 10 00 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும். (இ)

## இயங்கியது

யாழ்ப்பாணம். அக். 9

வர்த்தக வங்கியின் யாழ். கிளை நேற்றுக் காலை 2 மணி நேரம் இயங்கியது.

வங்கியின் சர்வதேசப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன. ஓய்வூதிய காசோலைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

90 சதவீதமான வங்கி ஊழியர்கள் நேற்று கடமையாற்றினர். (இ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 9

ஊழியர்களின் வரவு அதிகரித்ததை அடுத்து யாழ். செயலகம் நேற்று ஓரளவு சீராக இயங்கியது.

செயலகத்துக்கு மக்கள் வரவும் அதிகரித்திருந்தது. (உ-6

## மரண அறிவித்தல்

### திருமதி டொறிஸ் நவமலர் நயில்ஸ்

திருமதி டொறிஸ் நவமலர் நயில்ஸ் அவர்கள் சண்டிலிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (7-10-1990) மாலை 6-00 மணியளவில் காலமானார். இவர் காலஞ்சென்ற சட்டத்தரணி திரு. C. A. நயில்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி புளூபெல் கனகசபை, காலஞ்சென்ற செல்வி ந. சந்திரமலர், திரு. நவான் நயில்ஸ் (அவுஸ்திரேலியா), திருமதி செறினா நையில்ஸ் (ஜெனிவா) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. துரைரட்ணம் கனகசபை, திருமதி லலிதா நயில்ஸ் வைத்தியகலாநிதி பிறேமன் நயில்ஸ் ஆகியோரின் பிரியமுள்ள மாமியுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் சண்டிலிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று நல்லடக்கம் மானிப்பாயிலுள்ள பிப்பிலி மயானத்தில் நடைபெறும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்;
தேவாலயவீதி, சண்டிலிப்பாய்
திரு திருமதி கனகசபை
(C/5214)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org